# 5

# கூடிவாழ்ந்தால் . . . .

# கருணை

## கற்றல் நன்றே

உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னாது அவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே.

**- பாண்டியன் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்**
**(புறநானூறு : 183)**

- 'கீழ்ப்பா லொருவன் கற்பின்
  மேற்பா லொருவனும் அவன்கட் படுமே'

  இப்பாடலடிகள் சமுதாயத்திற்கு விடுக்கும் செய்தி குறித்துச் சிறு குறிப்பு தயார் செய்க.

## சண்டால பிக்குணி

(வட இந்தியாவில் சிராவத்தி என்றொரு பட்டணத்திற்கு அருகே ஒரு குக்கிராமம். அவ்வழியே நடந்து வருகிறார் ஆனந்தன் என்கிற புத்ததுறவி. அங்குப் பல பாதைகள் கூடும் சந்திப்பில் நிற்கும் ஒற்றை ஆலமர நிழலில் தாகம் மேலிட ஆயாசத்துடன் அமர்கிறார். அவ்வமயம் அருகில் ஒரு பாழுங்கிணற்றில் நீரெடுக்க இளமங்கை ஒருத்தி வந்து சேர்கிறாள்.)

தூய்மை தேடும்வெண் பாளை கிணற்றிலிட்(டு)
ஆயி ழையாள் கயிறு இழுத்துடன்

கோம ளாங்கிநீர் கோரி இறைத்தநாள்
கோமான் பிக்குவும் கோரினன் ஈதொன்று;

"தாகிக் கின்றது தாயே, கருணையால்
மோக னக்குளிர் நீர்மொண்(டு) அருள்வையோ?

அன்பே கொஞ்சம் அருந்திட" என்றதும்
மின்போல் மாது வியந்திது சொல்லுவாள்:

"என்ன விந்தைக் கதையிது பாவமே
இன்ன லில்ஐயா சாதி மறந்தீரோ?

தாழ்ந்த சாதியென் கையினால் நீர்வாங்கி
ஆழ்ந்(து)அ ருந்துவ ரோஉயர் ஆரியர்?

கோபம் வேண்டாம்! குடிநீர் தருவதால்
பாபம் உண்டாம்! பறைச்சிநான் சண்டாலி!

கிராமத் தின்புறம் கீழ்க்குடி வாழ்கிற
'சாமர்' நாயகன் தன்மகள் நா" னென்றாள்!
ஓதி னான்பிக்கு வும்துக்கத் தோடிது; -
"சாதி கேட்கவும் இல்லைநான் சோதரி!

சீத நீர் கேட்டேன் நாக்கு வறண்டதால்!
பீதி வேண்டாம்! தருக எனக்கு நீர்"

"நான் கேட்டது தண்ணீர், உன் சாதியை அல்ல!" என்று துறவி பதில் சொல்ல, தயக்கத்துடன் தண்ணீர் ஊற்றுகிறாள், தாக சாந்தி பெற்ற புத்தமுனி அங்கிருந்து அகல்கிறார்.

முனிபுங்கவரின் இந்த அபூர்வ சந்திப்பினால் மனம் நிலையின்றித் தவிக்கும் அந்த இளம்பெண்ணாள் தாய் தந்தையரிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் தான் பிறந்து வளர்ந்த குடில்விட்டுப் புத்த பிட்சுவைத் தேடி வெளியேறுகிறாள். இறுதியில் சிராவத்தியில் ஜேதவன் விஹாரத்தினை அடைந்து அங்கு புத்த பிக்குணி ஆகிறாள்.

ஏனைய பிக்குணிமாருடன் கூடிப் பௌத்த துறவியாக வாழ்க்கையைத் தொடங்கினாள்.

சண்டாலப் பெண்ணொருத்தி புத்த பிக்குணி ஆவதில் பொறாமை கொண்ட மேல்சாதி மக்கள் சிலர் நாடெங்கும் அவதூறுப் பிரச்சாரம் கிளப்புகின்றனர். இந்த உள்நாட்டுக் குழப்பத்தை அறிந்த மன்னர் பிரசேனஜித் அந்நகர் பௌத்த மடத்திற்குச் சென்று புத்த பகவானைத் தரிசித்துக் கலந்துரையாடித் தெளிவு பெறுகிறார்.

புத்தன் திருவடி தன்னை-மன்னன்
முத்துச் சுடர்முடி நோக்கும்!

சங்கதி அன்றொரு துச்சம்-மன்னன்
தங்கதி யோபெரும் அச்சம்!

மௌனத்தில் ஆழ்ந்தனன் வேந்தன் - அவன்
மோனம்க லைத்தனன் புத்தன்:-

"செல்வனே! தாழ்குலத் தங்கை-பற்றி
அல்லவோ பேசிட வந்தாய்?"



பேச்சென்ன, யோசனை என்ன? - சாதி
மாச்சரி யம்போலி அன்றோ!

தீதில் விலங்குபோ ராடும் - சுய
நாதத்(து) எதிரொலி கேட்டு!

அந்தண ரோஅற வோர்காண்-பார்க்கும்
செந்தண்மை கல்வியால் மேவும்!

எல்லாக் கிருமிகள் போல-பிறந்து
இல்லாதாம் மானிட சாதி!

நல்லறம் யாவையும் ஆற்றும்-மன
வல்லமை மாந்தர்க்கே வாய்க்கும்

முட்டைக்கூட் டுப்புழு தோன்றி-பின்னர்
பட்டுச் சிறகு விரித்தே

வான்வெளி முற்றும்ப றக்கும்-மலர்த்
தேன்பட்டாம் பூச்சியாய் மாறும்!

சாலும் பரிணாம விந்தை-அதன்
மூலம் உருமாறும் விந்தே!

நரம்பும் இதழ்களும் மொட்டும்-வண்ணக்
கூம்பும் மலரும்பூ வன்றோ?

நெற்கதி ரூடேமு ளைக்கும்-காட்டுப்
புற்களோ பாவம்பு லையர்?

நேற்றைய மூடத்த னங்கள்-இன்று
போற்றுறும் ஆசார மானால்

நாளைய சாத்திரம் அஃதாம்-புவி
பாமுறச் சம்மதம் தானோ?

ஏனென் றறிகிலார் எங்கோ-போவர்
காணா வழிப்பய ணந்தான்!

காரிருட் டில்குரு டர்க்குத்-துணை
ஓர் குரு டோஇருள் நாட்டில்?

பொல்லாத பேராசை கொண்டும்-நயம்
இல்லாப் பொதுநலத் தொண்டும்

முற்றிய பாமர நெஞ்சில்-புகை
பற்றும்பொறாமையே சாதி!

ஆணவம் வெஞ்சினம் வன்மம் - மனக்
கோணலில் தீங்குகள் என்றே

எண்ணம்போல் மாறிடும் சாதி-அந்தி
வண்ணங்கள் வானிடை போலே!

சொந்தக் குடும்பம் விளக்கும்!-அது
பந்தம் முறியச் சிதைக்கும்!

துண்டாய்உ டைத்திடும் வீட்டை-பகை
உண்டாய்மு டித்திடும் நாட்டை!

சார்ந்தாரைக் கொல்லுமோர் தீயாம்-இனம்
சேர்ந்தாரைத் தின்னுமோர் பேயாம்!
போற்றுவ தோஇந்த நோயை? -சாதி
வேற்றுமை யோவெறும் மாயை!

நேர்ந்திடும் மானிட வீழ்ச்சி-இது
வாழ்ந்திடும் சாதியின் சூழ்ச்சி!

சாதிதன் போரிது நின்றால்-நரக
வேதனை பூமியி லேது?

அன்புதான் மானிட வாழ்வாம்!-செல்வ,
அன்பிலா வாழ்வுதான் சாவாம்!

அன்பே நரகமாம் தீவில்-ஒளி
இன்பநல் சொர்க்கமெ ழுப்பும்!

அன்னையின் நெஞ்சுந ரம்பில்-ஒழுகிச்
சென்றிடும் செங்குரு தித்தாய்ப்

பாலென மாறுதல் போலே-எவரும்
சீலராய் மாறுவர் அன்பால்!

சொல்வதா யின்அழுக் காறு-இன்றேல்
இல்லைதான் இல்லைதான் சாதி!

பொற்பதம் வீழ்ந்துவ ணங்கி-மன்னன்
அற்புதப் பக்திவ யத்தால்

கட்டளை ஏற்றதாய்ச் சொன்னான்-குமிழ்
இட்டம லர்க்கரம் கூப்பி!

பொறாமையே சாதி என்றும், குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம் என்றும், அன்னையின் கருப்பையிலிருந்து உதித்த மக்கள் அனைவரும் ஒரே இனம் என்றும், அன்பே மனிதனின் ஆதார சுருதி என்றும் பலவாறு அருளுரை வழங்குகிறார் புத்தர். தெளிவு பெற்ற மன்னன் புத்தரை வணங்கி அவ்விடம் விட்டு அகல்கின்றான்.

**- நெல்லை சு.முத்து**
**(குமாரனாசான்-மலையாளம்)**

- சண்டால பிக்குணி கவிதைக் கருத்தைக் கீழ்வரும் ஆசிய ஜோதிப் பாடல் பகுதியுடன் ஒப்பிடுக.

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவ துண்டோ அப்பா?
அன்புதான் மானிட வாழ்வாம்! - செல்வ
அன்பிலா வாழ்வுதான் சாவாம்
அன்பே நரகமாம்தீவில் - ஒளி
இன்பநல் சொர்க்கமெ ழுப்பும்!

# ஒன்றுபட்டால்...

## சிந்தனை ஒன்றுடையாள்

தாய்மொழி, தாய்நாடு என்று மொழியையும் நாட்டையும் தாயாக மதித்து வணங்கும் நாடு நம் நாடு. 'எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்தமிழணங்கே!' எனத் தமிழைத் தாயாக எண்ணிப் போற்றுகிறார் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. 'செப்பு மொழி பதினெட்டுடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள்' என இந்தியத் தாயைப் பாடிப் பரவுகிறார் பாரதிப்பெரும்புலவர்.

### சாதிப்பாகுபாடு

முடியிலே இமயமும் அடியிலே குமரியும் இடையிலே விந்தியமும் கொண்ட இந்தியத் திருநாட்டில் வாழுகின்ற எழுபது கோடி மக்களில் குலத்தால் தாழ்ந்தவர் யாருமில்லை; பிறப்பால் உயர்ந்தவர் எவருமில்லை. எல்லாருமே 'சரி நிகர் சமானமாக' வாழும் இம்மண்ணின் மைந்தர்தாம். அதில் எள்முனையளவும் ஐயமில்லை. ஆனால், இவ்வொற்றுமைக்கு உலை வைப்பதில் முதலிடம் பெறுவது சாதிப்பாகுபாடே. ஆதியில் இல்லாது பாதியில் வந்து பெரும் பீதியைத் தந்திடும் சாதி, மக்களைப் பிரித்து வைத்துச் சதிராட்டம் போடுகிறது. இச்சாதிப்பூசல் 'அங்கிங்கெனாதபடி' எங்கும் நுழைந்து விடுகிறது. படியாதவரிடம் மட்டும்தான் அது வேரூன்றி இருப்பதாக எண்ண வேண்டாம். படித்தவரிடமும் அது கிளைத்துத் தழைத்துப் பெருமரமாக வளர்ந்து வானோங்கி நிற்கத்தான் செய்கிறது. சாதியெனும் படைநோய்க்கு மருந்தாக நின்று, அதனை மரித்துப் போகச் செய்ய வேண்டிய கடப்பாடுடைய கற்றவர்களே அதற்கு விருந்து வைத்துப் போற்றுகின்ற வேதனைச் செயல் கண்டு வெட்கித் தலை கவிழ வேண்டியிருக்கிறது. இத்தகைய பிளவுச் சிந்தனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். உயர்வு தாழ்வு மண்டிக் கிடக்கும் மனித மனங்கள் குப்பைக் கூளங்களின் கொள்கலன்கள்.

### சமதர்ம சிந்தனை

கொட்டி வைத்த குப்பைக்கூளங்கள் காற்றடித்தவுடன் நாலாபக்கமும் சிதறிப் பறக்கின்றன. குவித்து வைத்த கோலக் கற்களோ ஈடுகொடுத்து இணைந்தே கிடக்கின்றன. உயர்வு தாழ்வு எனும் ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய குப்பைக் கூளங்கள் 'ஒன்றே யாவரும்' என்னும் சிந்தனைக் காற்றின் வேகம் தாளமுடியாமல் சிதறிப் பறந்து விடும். ஆதலின் ஒன்றே யாவரும் என்னும் எண்ணம் 'இன்றே' பரவ வேண்டும். நெஞ்சத்தளவில் நஞ்சினை வைத்து உதட்டளவில் உறவை வைத்துப் பழகுவதனால் மட்டுமே உயர்வு தாழ்வு நீங்கி விடாது. உயர்வு தாழ்வு அகல வேண்டுமெனில் உண்மையான சமதர்மச் சிந்தனை உள்ளத்தில் பூத்துக் குலுங்க வேண்டும்.

> **பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
> **செய்தொழில் வேற்றுமை யான்**

என்னும் உலகப் பொதுமறை உணர்த்தும் உண்மையும் அதுதான். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என எண்ணும் இதயங்கள் வைர மணிக்கற்களின் வைப்பிடங்கள். அத்தகைய இதயங்களில் நாம், 'எல்லாரும் ஓர்குலம்; எல்லாரும் ஓரினம்; எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்னும் ஒன்றிய சிந்தனை ஒளிவிட முடியும்.

### சாதி ஒருமை

ஒரே தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்களுள் ஒருவர் மருத்துவராகிறார். ஒருவர் வழக்கறிஞர் ஆகிறார். மற்றொருவர் ஆசிரியரா

கின்றார். அவரவர் செய்கின்ற தொழிலால் அவர்கள் வேறுபட்டு நிற்கின்றனர், அவ்வளவே! இங்ஙனம் செய்கின்ற தொழிலால் அவர்களுள் உயர்வு தாழ்வு எனும் வேற்றுமை தோன்ற இடமே இல்லை. நம் உடம்பிலுள்ள உறுப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயன் நோக்கி உள்ளன. ஒன்று மற்றொன்றைத் தாழ்வாகக் கருதினால் உடல் இயக்கமே தடைப்பட்டுவிடுமன்றோ? பிறப்பு, சிறப்பு, பேசிடும் உணர்வு, உள்ளம், நினைந்திடும் பாங்கு அனைத்திலும் ஒத்தோர் செய்கின்ற தொழிலால் வேறுபட்டுநிற்பது பொருந்துமோ? ஒருவர்க்குப் பிறப்பினால் பெருமையில்லை; செய்கின்ற நல்ல செய்கையால் தான் சிறப்பு வந்து எய்துகிறது. இதனையே கவிமணி,

**எவர் உடம்பிற்கும் சிவப்பேரத்த நிறமப்பா**
**எவர் விழிநீர்க்கும் உவர்ப்பே இயற்கைக் குணமப்பா**
**பிறப்பினால் எவர்க்கும் பெருமை வாராதப்பா**
**சிறப்பு வேண்டுமெனில் நல்ல செயல் வேண்டுமப்பா**

எனக் கூறிப் போந்தார். இந்தச் சீரிய சிந்தனையை நம் சிந்தையிற் கொள்வோமாயின், பிறப்பினால் உயர்வு தாழ்வு பேசும் பேதைமை நம்மைவிட்டு நீங்கும் என்பது உறுதி.

**சமய ஒருமை**

சாதிக்கு அடுத்தபடியாகச் சமத்துவப் பார்வையைத் தள்ளாடச் செய்வன சமயப்பூசல்கள். 'சமயம்' என்னும் சொல் 'சமை' என்னும் சொல்லடியாகப் பிறந்து 'பக்குவப்படுத்தல்' என்ற ஆழ்ந்த பொருளைத் தருவது. அத்தகைய சமய நெறிக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டவர்கள் பக்குவமற்ற முறையில் பூசல்களுக்கும் பிளவுகளுக்கும் வித்திடலாமா? நம் இந்தியத் திருநாடு மதச்சார்பற்ற நாடு. இங்குப் பல்வேறு மதத்தைச் சார்ந்தவர் உள்ர். அனைவரும் இம்மண்ணுக்கு உரிமை பூண்டவர்; உற்ற உடன்பிறப்பினர்; மதத்தால் வேறுபட்டவர்களாயினும் நாட்டால் ஒன்றுபட்டு வாழ்பவர்கள். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே அறிவுடைமை; அதுவே நம்நாட்டின் புகழுடைமை.

சமயம் காரணமாகச் சண்டையிடுதல் அவரவர் சமயக் கொள்கைக்கே விரோதமானது. மக்களை ஒன்றுபடுத்தி உயர்த்திடத்தான் மதங்கள் தோன்றியதாகக் கூறுவர்; பிளவுபடுத்திப் பிரித்திட அல்ல. நாம் பல்வேறு சட்டைகள் அணிந்து கொள்கிறோமே, எதற்காக? உடம்பை மறைப்பதற்காக! சட்டைகள் பல்வேறு வகையில் பல்வேறு வண்ணத்தில் அமைந்திருக்கலாம். ஆயினும் அவற்றை அணியும் உடம்புகள் அனைத்துமே மானிட உடம்புகள்தாம். மதங்களும் சட்டைகள் போன்றவைதாம். மதங்கள் என்னும் சட்டைகள் வேறாக இருக்கலாம்; அவற்றை அணிந்துள்ள மனிதர்கள் யாவரும் சகோதரர்களே! இம்மண்ணுக்கு உரியவர்களே! இந்தச் சிந்தனைப்பூ எல்லாருடைய இதயங்களிலும் பூக்குமானால் அங்கே வாயடிக்கும், கையடிக்கும் இடமே இல்லை; ஒற்றுமை மணங்கமழத் தடையுமில்லை. இக்கருத்தினைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தமக்கேயுரிய தனி மிடுக்குடன் பாடியுள்ளார்.

பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களும் இப்பெருநிலம் பெற்றெடுத்த பிள்ளைகளே. இதனை அறிந்துகொண்டால் மட்டும் போதாதாம்; உணர்ந்து கொண்டால்தான் ஒற்றுமை நிலைக்குமாம். உண்மைதானே! மதக்கலகங்கள் அறவே நீங்க இதைவிடச் சிறந்த மார்க்கம் வேறு உண்டா? இதனைச் சிந்தையில் நிறுத்திச் செயல்பட வேண்டியதே நம் அனைவரின் தலையாய கடமை. அத்தகைய உணர்வு வந்துவிட்டால் இமயத்தில் இருப்பவர்க்கு ஒன்று நேர்ந்தது எனில் குமரி முனையிலிருப்பவரும் உதவி செய்வதற்கு விரைந்து ஓடுவார். இதனை,

**இமயச் சாரலில் ஒருவன் இருமினான்**
**குமரி வாழ்பவன் மருந்து கொண்டு ஓடினான்**
**ஒருவர்க்கு வந்தது அனைவர்க்கும் என்ற**
**மனப்பாங்கு வளர்ந்தது வேண்டிய மட்டும்**

எனப் பாவேந்தர் எடுத்துரைப்பார். எத்தகைய உயர்ந்த எண்ணம் பார்த்தீர்களா? சாதி சமய வேறுபாடுகளுக்கு இடங்கொடாமல் ஒன்றாய் நின்றால் நிறை வாழ்வு அடைவோம் என்பதையும்,

**இத்தேசத்தினர்கள் ஓர் தாய்**
**தந்திடு சேய்கள்**
**நேசத்தாலே நாமெல்லோரும்**
**ஒன்றாய் நின்றால்**
**நிறைவாழ்வு அடைவோம்**

என வடித்துக் காட்டுகிறார் பாவேந்தர்.

இதுகாறும், சாதி ஒருமையும் சமய ஒருமையும் பாரத ஒருமைக்கு எந்த அளவுக்கு இன்றியமையாதன என்பதைப் பாரதியாரும், பாரதிதாசனாரும் காட்டுமாறு கண்டோம். இனி, பாவேந்தர் காட்டும் உலக ஒருமையையும் காண்போம்.

### உலக ஒருமை

அறிவியலின் வேகமான முன்னேற்றத்தினால் உலகத்தின் பரப்பளவே மிகவும் சுருங்கி விட்டது எனலாம். உலகத்தின் எந்த மூலையில் எது நிகழ்ந்தாலும் உடனுக்குடன் உலகம் முழுமையும் தெரியக்கூடிய அளவுக்கு அறிவியலின் சாதனை அமைந்துள்ளது. இந்நிலையில் மனிதனின் சிந்தனையோ, உலக ஒருமையை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. 'ஒன்றே உலகம்' என்னும் ஒற்றுமைக் கோட்பாடு வேகமாக வளர்ந்து வருகிறது. இதனைப் பாவேந்தர்,

**தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு**
**சம்பாத்தியம் இவையுண்டு, தானுண்டு**

என்னும் சின்னதொரு கடுகு உள்ளத்திலிருந்து

**தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்**
**தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே**
**யென்னும் தாயுள்ளம்**

தனைநோக்கி மனித சிந்தனை முன்னேற வேண்டுமென முரசறைகிறார். 'எல்லா மக்களும் ஒன்றே' என்னும் தாயுள்ளம் கொள்ளும்போது தான் உலகில் தன்னலம் தீரும். தன்னலம் தீரும் போது சண்டையும் தானாகத் தீர்ந்துவிடும்.

### மனித நேயம்

மானுடம் என்னும் எண்ணமுடன் நமது சிந்தனை விரியுமானால் அங்கே பிளவுக்கு இடமில்லை; பேதமும் இல்லை. இதனையே பாவேந்தர்,

**அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!**
**விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!**
**அணைந்துகொள் உன்னைச் சங்கமமாக்கு!**
**மானிட சமுத்திரம் நான் என்று கூவு!**

இவ்வாறு சாதியொருமை, சமய ஒருமை, இனவொருமை இவற்றின் வழி இந்தியர் ஒருமை பெற்று, உலக ஒருமை காண்பது என்னும் சிந்தனை ஒன்றுடையவள் நம் இந்தியத் தாய், அச்சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்க யாவரும் எழுக! அதுவே, இம்மண்ணின் மைந்தர்களின் இன்றைய கடமையாகும்.

**– டாக்டர் மு.பி. பாலசுப்பிரமணியன்**
**(இலக்கியப் புன்னகை)**

- மத நல்லிணக்க ஊர்வலத்தில் ஏந்திச் செல்வதற்கான நல்லிணக்கச் சொற்றொடர்களைச் சேகரித்து ஊர்வல அட்டைகள் தயாரிக்கவும்.

**ஆபத்துக் காலத்தில்...**

மும்பையில் தொடர் குண்டு வெடிப்பு. மும்பைக்காரர்களின் மனஉறுதி இந்தச் சந்தர்ப்பத்திலும் வெளிப்பட்டது. மும்பையின் ரத்தநாளமான மின்சார ரயில்கள் நிறுத்தப்பட்டன. உடனடியாகக் களத்தில் இறங்கிய பயணிகள், மீட்புப் பணிகளில் முன்னின்று செயல்பட்டார்கள். காவல்துறையுடன் இணைந்து காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கும் தங்கள் வீட்டுடன் பேச விரும்பியவர் களுக்கு உதவுவதிலும் முனைப்புக்காட்டினார்கள் பொதுமக்கள். நகர் முழுக்க இருந்த சாலைகளில் இளைஞர்களும் வயதானவர்களும் திரண்டு சாலையில் நடந்து செல்பவர் களுக்குத் தண்ணீர், பிஸ்கட் போன்றவற்றை வழங்கினார்கள். பள்ளி மாணவர்களும் மாணவிகளும் போக்குவரத்துச் சந்திப்புகளில் நின்று குளிர்பானங்களையும் தண்ணீரையும் வழங்கினார்கள். கார் வைத்திருந்தவர்களில் வெகு சிலரைத் தவிர பெரும்பாலானவர்கள் தங்கள் கார்களில் வயதானவர்களை ஏற்றிச் சென்று அவர்கள் செல்ல வேண்டிய இடத்தில் இறக்கிவிட்டார்கள். பைக் வைத்திருந்த பெரும் பாலானவர்கள் பயணிகளுக்கு லிப்ட் கொடுத்து உதவினார்கள். மாதுங்காவிலிருந்து 15 கி,மீ, தள்ளி இருக்கும் போரிவிலிக்குக் கூட பைக்கில் அழைத்துச் சென்றார்கள்.

போக்குவரத்து நெரிசல் ஆரம்பித்தவுடன் ஆங்காங்கே இளைஞர்கள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த ஆரம்பித்தார்கள். "யாரும் எங்கள் வீட்டிற்கு வந்து தங்கலாம்; கட்டணம் ஏதும் கிடையாது" என்று எழுதப்பட்ட அட்டைகளைப் பிடித்தவாறு சிலர் வீதிகளில் நின்றுகொண்டிருந்தார்கள்.

இறந்தவர்களின் உடலை எடுத்து வந்தவர்கள், காயமடைந்தவர்களை அழைத்து வந்தவர்கள் என மருத்துவமனைகள் எல்லாம் நிரம்பி வழிந்தன. குண்டு வெடித்தவுடன் பதற்றம் அடைந்து அந்த இடத்தைவிட்டே ஓடிவிடாமல், காயமடைந்து கிடந்தவர்களையும் இறந்துபோனவர்களின் உடல்களையும் கிடைத்த வாகனங்களில் தங்கள் சொந்த செலவில் ஏற்றி வந்து மருத்துவமனையில் சேர்த்தார்கள்.

# சாம்பல் சிதறிய வீதிகளில்

உனது முகத்தை நானும்
எனது முகத்தை நீயும்
சந்தித்தாக வேண்டும்
நாளை காலை

நேற்றின் வெறியில் – நம்
அரிவாள்கள் ருசித்த ரத்தம்
உறைந்தது உறைந்தபடியே இருக்கட்டும்

நீயும், நானும்
நாணயத்தை சுண்டினால் கூட
தலைவிழ வேண்டாமென்று ஆசைப்படுகிற
பூமனசுக்காரர்கள்...

இன்று....
என் தலை அறுக்க நீயும்,

உன் தலை அறுக்க நானும்
வெறி கொண்டலைகிறோமே?
வண்ணத்துப்பூச்சியின்
கனவோடு சிறகடிக்கும் - நம்
குழந்தைகளின் மனதை
பயமென்னும் தீயிட்டுப் பொசுக்க . . . .
சாம்பல் சிதறிய வீதிகளில்
அழுவதற்கும் நாதியற்று
அலைபாய்கிறதே காற்று

மனதிலிருப்பதைச் சொல்ல
நேற்றுவரை பயன்பட்ட
இந்த நாக்குகள்..
ஜாதி வெறியூட்டும்
மண்வெட்டியாய்
மாறியதெப்போது?

சாணம் கரைத்து
வாசல் தெளித்து
மாக்கோலம் போட்ட
முற்றங்களில்...
ரத்தம் கரைத்து
வெறியை தெளித்து
யுத்தம் நடக்க..

நம் பிணங்களின் தலைமாட்டில்
மாரடிக்கும் மனைவிகளுக்கும்
உயிரின்றி துவண்ட பாதங்களைப்
பற்றிக் கொண்டிருக்கும்
ஏதுமறியா குழந்தைகளுக்கும்
பதிலென்ன வைத்திருக்கிறோம்
நாளை...?

அன்பின் சுவடை
மண்ணிலிருந்து துடைத்தெடுக்க
நீயும் நானும்
ஜாதீயாய்ப் பிரிந்து
நாய்ச் சண்டையிடலாமா?

பூக்களிலிருந்து
ரத்தவாடை அடிக்கலாமா?
பூமியிலிருக்கும்
அன்பின் ஈரம் வற்றலாமா?

நிலவில் தடம் பதித்த
மனித அறிவை - ஜாதியின்
குறுகிய நிழல் கொண்டு
மறைக்கலாமா?

மேகம் சூல் கொண்ட
மழைக்காலம் வரும் நாளில்
தாயின் கனவைச் சுமந்து
பூமியின் மார்பு சுரக்கும்,

பூக்களின் உலகத்தில்
முட்களுக்கிடமில்லையென...

**- அ. இலட்சுமிகாந்தன்**

- சாலை விபத்து, பெருமழை, நிலநடுக்கம் போன்ற ஆபத்துக் காலங்களில் மாண வர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்துக் கலந்துரையாடிச் சிறுகுறிப்பு தயார் செய்க.
- வன்முறை பெருகிவரும் இன்றைய சமூகச் சூழலில் மனிதநேயத்தை மக்களி டையே வளரச் செய்யும் வகையிலமைந்த சிறுகதை ஒன்று எழுதி வெளியிடுக.

# மன உறுதி

## அஞ்சலை ஆத்தா

வியர்க்க விறுவிறுக்க வீட்டுக்குள் நுழைந்த அஞ்சலை ஆத்தா "டேய் சங்கரு.... ஏலே ரவி... எங்கேடாப் போயி தொலைஞ்சிங்க?" என்று குரலெடுத்துக் கூவினாள். கொல்லைப் புற ஆத்து மணலில் கிட்டிப்புல் விளையாடிக் கொண்டிருந்த சங்கரும் ரவியும் குச்சியும் கையு மாக விழுந்தடித்துக் கொண்டு வீட்டிற்குள் ஓடி வந்தனர்.

"ஏலே... மணி ஒம்பதாவப் போவுது. இன் னுமாலே ஒங்களுக்கு வெளையாட்டு...? ஸ்கூலுக்குச் சீக்கிரம் கௌம்புங்கலே...ம் போயி சட்டை, டவுசர மாட்டுங்க" என்று பயலுகளை விரட்டிவிட்டு இரண்டு எவர்சில்வர் தட்டுகளை எடுத்துவைத்துக் காலையில் ஆறுமணிக்கு வடித்து வைத்திருந்த சாதத்தை அதில் போட்டு, மோரை ஊற்றி, மாங்காய் ஊறுகாய்த் துண்டு இரண்டையும் வைத்தாள் அஞ்சலை ஆத்தா!

யூனிஃபார்மை மாட்டிக்கொண்டு, ஏதோ தெருக்கூத்துக்கு மேக்கப் போடுவதைப் போல சங்கரும் ரவியும் பவுடரை முகத்திலும் கழுத்தி லும் அரை அங்குலத்திற்கு அப்பிக்கொண்டு திரும்பி வந்தனர்.

"என்னலே... வேசம் போட்டுக்கிட்டு வந்து நிக்குறீக..?'' வெளுத்துப்போன தன் புடவை முந்தானையால் அளவுக்கதிகமாக இருந்த பவுடரை அஞ்சலை ஆத்தா மெல்ல துடைத்து விட்டாள்.

பக்கத்தில் அமர்ந்து பரிவோடு சாப்பாட் டைப் பரிமாறி இருவரையும் உண்ண வைத்தாள். அவர்களைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

'ம்.. நல்ல கறி சோறுனு சாப்பிட்டு எத்தனை காலமாச்சு..!' முட்டி வந்த சோகம் ஒரு பெருமூச் சாக வெளிப்பட்டது.

"ஆத்தா! எனக்கு ப்ளூ டவுசரு வாங்கித் தர்றேன்னு எத்தனை நாளா சொல்லிக்கிட்டேயி ருக்கே. பாரு எப்படி வெளுத்துப்போச்சி? நீ தானே ஆத்தா தொவைக்கிறே?.." அவளையே குற்றவாளியாக்கிக் குறுகுறுக்கப் பார்த்தான் சின்னவன் ரவி.

''என்ன ஆத்தா நீ... இந்தச் சட்டைய எத்தனை வாட்டி தைச்சுக் குடுத்துட்டே.? பாரு.. இப்போக்கூட கிழிஞ்சிருக்கு. பள்ளிக்கூடத்து பசங்க எல்லாம் என்னை பீதாம்பரம் – பீதாம்ப ரன்னு கேலியாகக் கூப்டுறானுக. ஆத்தா எனக்கு... எனக்கு எவ்வளவு அவமானமா இருக்குத் தெரியுமா?'' புறங்கையில் வடிந்த மோரை நக்கியபடி பெரியவன் சங்கர் கண் கலங்கச் சொன்னபோது,,அஞ்சலை ஆத்தா வுக்கு மனதுக்குள் வேதனைப் பீறிட்டுக் கிளம் பியது.

"கவலைப்படாதீங்க கண்ணுகளா! இந்த ஆத்தா ஒங்களுக்கு வேணுங்கறத சீக்கிரம் தருவா" – என்ற ஆறுதல் வார்த்தைகளை அப் போதைக்குச் சொல்லி வைத்து, அவர்களைப் பாசத்தோடு தடவிக்கொடுத்துத் தட்டிக்கொடுத் துப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைத்தாள்.

"அப்பாடா!" என்றபடி திண்ணையில் முந் தானையை விரித்துப் படுத்த அஞ்சலை ஆத்தா கண்முன்னே கடந்து முடிந்த சம்பவங்கள் எல்லாம் கடகடவென்று ஓட ஆரம்பித்தன.

அஞ்சலை தன் ஒரே மகன் சுந்தரேசன் மேல் பாசத்தைக் கொட்டி வளர்த்தாள். வீடு கட்டும் மேஸ்திரியாக வேலை பார்த்துக்கொண் டிருந்த அவள் கணவன், மூன்று மாடிக் கட்டடம் ஒன்றிலிருந்து தவறி விழுந்து நாற்பத்தி ஒன்பது வயதிலேயே போய்ச் சேர்ந்துவிட்டான்.

நல்ல வேளை... சுந்தரேசன் போஸ்ட் மேனாக வேலை செய்துகொண்டிருந்தான்! பொருளாதார நெருக்கடி எதுவும் ஏற்படவில்லை; அஞ்சலை சமாளித்துக்கொண்டாள்.

கணவன் இறந்த இரண்டு வருடத்துக்குப் பின் பார்த்துப் பார்த்துப் பரிமளத்தை மகனுக்கு மணமுடித்து வைத்தாள்.

குடும்பம் அமைதியாக, மகிழ்ச்சியாக போய்க் கொண்டிருந்தது. சங்கர், ரவி பிறந்தனர். ஆனந்த வெள்ளம் கரை புரண்டுக் கொண்டிருந்த வேளையில்தான் அந்த அசம்பாவிதம் நடந்தது. ஊர் முழுவதும் பரவி வந்த காலரா நோய்க்குப் பரிமளமும் பலியானாள்.

அஞ்சலைக்குக் கிடைத்த இரண்டாவது அடி இது! இருந்தாலும் மனதைத் தேற்றிக் கொண்டு, தாயற்ற அந்த இரண்டு பிஞ்சு பிள்ளைகளுக்கும் தாயாக மாறினாள். பிள்ளைகள் சித்தி கொடுமைக்கு ஆளாகிவிடக் கூடாது என்ற எண்ணத்தில், அஞ்சலை சுந்தரேசனின் இரண்டாவது திருமணத்திற்கு முயற்சி செய்யவே இல்லை; அவனும் அதை விரும்பவில்லை.

இந்தச் சூழ்நிலையில் சுந்தரேசனுக்குத் திருநெல்வேலி டவுனிலிருந்து மயிலாடுபட்டி என்ற கிராமத்திற்குப் பணிமாற்றம் வந்து சேர்ந்தது. இடமாற்றம் மனதிற்கு ஆறுதல் தரும் என்ற எண்ணத்தில், அஞ்சலை மூட்டை முடிச்சுகளுடன் ஏற்கனவே சுந்தரேசன் பார்த்து வைத்திருந்த அந்தச் சிறிய வீட்டிற்குப் பிள்ளைகளுடன் வந்து சேர்ந்தாள்.

மயிலாடுப்பட்டி கிராமத்து மக்கள் அஞ்சலையை ஆச்சரியத்துடன் பார்த்தனர். வாட்ட சாட்டமான உருவமும் கிராமத்துச் சுத்துக்கட்டு புடவையும் காதுகளில் நீண்ட துளையிடப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்த மூன்று பவுன் பாம்படமும் (தண்டட்டி) கையில் இரண்டு சிறுவர்களுமாக அங்கு வந்து குடியேறிய அஞ்சலை மீது எல்லோருக்கும் ஒரு தனி மரியாதையே ஏற்பட்டது!

அஞ்சலை மிக விரைவில் அனைவரிடமும் அன்பாகப் பழகிவிட்டாள். எல்லோருக்குமே அவளை மிகவும் பிடித்திருந்தது. பல கஷ்டங்களில் அடிபட்டதாலோ என்னவோ வெண் பஞ்சாய் நரைத்துப் போயிருந்த அவள் தலையையும் கம்பீரமான அந்த உடம்பையும் குரலையும் பார்த்துவிட்டு, சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை அவளை அஞ்சலை ஆத்தா என்று அன்போடு அழைத்தார்கள்; அவள் நீண்ட காதுகளில் தொங்கும் நகையை வியப்போடு பார்த்து ரசித்தார்கள். அந்தப் பகுதியில் யாரும் அதுபோல் நகை அணிவதில்லை.

கூடிய விரைவில் அந்தக் கிராமத்து மக்களுள் ஒருத்தியாகக் கலந்து போனாள் அஞ்சலை. எல்லோருடைய கஷ்ட நஷ்டங்கள், கிராமத்துப் பழக்க வழக்கங்கள் எல்லாவற்றிலும் பங்கேற்றாள்.

சங்கரும் ரவியும் பள்ளிக்கூடத்துக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். சுந்தரேசனும் போஸ்ட்மேன் வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தான். கவலையில்லாமல் காலம் ஓடிக்கொண்டிருந்தது.

அந்தக் கிராமத்து மக்களின் கள்ளமற்ற அன்பும் ஒற்றுமையும் அஞ்சலைக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்து, முஸ்லிம், கிறிஸ்துவர்கள்... என்று பல மதத்தினர் வாழ்ந்தாலும் கூட எல்லோரும் ஒரு தாய் மக்கள் போல் வாழ்வதைக் கண்டு அதிசயித்துப்போனாள்.

ரம்ஜானுக்கு தர்க்கா வாசலில் இந்துக்கள் கஞ்சி காய்ச்சி ஊற்றுவதும், கோயில் திருவிழா சமயங்களில் பாகுபாடின்றிப் பிற மதத்தைச் சேர்ந்தவர்கள் தேர் இழுப்பதும், கிறிஸ்துமஸ், தீபாவளி, ரம்ஜான் விழாக்களில் விருந்துகளை, இனிப்பைப் பகிர்ந்து வாழ்வதும், மற்றவர்கள் குடும்பங்களில் ஏற்படும் இன்ப துன்பங்களில் பங்கேற்பதும்... அஞ்சலை ஆத்தா எங்கேயும் காணாத ஒரு காட்சியாக இருந்தது.

மற்ற கிராமங்களுக்கெல்லாம் ஒரு முன் மாதிரியாய் விளங்கும் இந்த மயிலாடுபட்டி கிராமத்துக்குத் தன் குடும்பம் வந்து சேர்ந்ததைப் பெருமையாக நினைத்துக்கொள்வாள்.

ஊர்ப் பெரியவர்கள் முதற்கொண்டு அனைவரும் அஞ்சலை ஆத்தாவிடம் ஒரு தனி மரியாதையும் மதிப்பும் வைத்திருந்தனர். சில விஷயங்களில் அவளிடம் வந்து ஆலோசனை கூடக் கேட்டார்கள்.

ஆனந்தமாக-அமைதியாக நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. பெரியவன் சங்கர் ஆறாவதும் சின்னவன் ரவி நாலாவதும் படித்துக்கொண்டிருந்தார்கள்.

அப்போது தான் அந்த அசம்பாவிதம் நடந்தது...

கடிதங்களை வீடுகளில் பட்டுவாடா செய்து கொண்டிருந்த சுந்தரேசன், மே மாத வெயிலில் கொடுமை தாளாமல் சாலையைச் சரியாகப் பார்க்காமல் விரைவாகக் கடக்க, வேக வேகமாக வந்த லாரி ஒன்று அவனை மோதித்தள்ள.. சுந்தரேசனின் ரத்தத்தில் அவன் கொண்டுபோன கடிதங்கள் நனைந்துபோயின...! அந்த நடுரோட்டிலேயே அவன் உயிர் பிரிந்துவிட்டது.

அஞ்சலை ஆத்தாவுக்கு இது மிகப் பெரிய பேரிடி! இருந்தாலும் பிள்ளைகளைக் கருத்தில் கொண்டு அப்போதும் தன்னையே தேற்றிக் கொண்டாள்; சோர்ந்து முடங்கிப் போய் விடவில்லை.

இதோ.... வருடங்கள் மூன்று ஓடிவிட்டன. இரண்டு வருடங்கள், இருந்த பணத்தில் காலம் ஓடியது. ஓராண்டாகக் காலையில் பள்ளிக்கூடத்தைப் பெருக்கி, தண்ணீர் எடுத்து வைப்பதற்காகக் கிடைக்கும் நானூறு ரூபாய்தான்... வீட்டு வாடகை, சாப்பாடு, பிள்ளைகளின் படிப்புக்கென்று கொஞ்சம் கை கொடுக்கிறது.

சுந்தரேசன் உயிரோடு இருக்கும் வரை எந்தக் குறையுமில்லாமல் இருந்த பிள்ளைகளுக்கு, ஒரு யூனிஃபாம் கூடத் தன்னால் ஒழுங்காக வாங்கித் தர முடியவில்லையே என்ற வேதனை நெஞ்சைப் பிசைந்தது அஞ்சலை ஆத்தாவுக்கு.

கடந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த அஞ்சலை ஆத்தாவை, கசமுசவென்ற பேச்சுக் குரல்கள் நிகழ்காலத்திற்குக் கொண்டுவந்தன.

படுத்துக் கிடந்த அஞ்சலை ஆத்தா பரபரப்புடன் எழுந்து உட்கார்ந்தாள். தெருவில் ஏகப்பட்ட பேர் ஆவேசமாக பேசிக்கொண்டு போய், வந்து கொண்டிருந்தார்கள்.

வாசல்படியில் இறங்கி நின்று கொண்ட அஞ்சலை ஆத்தா பக்கத்தில் வந்த மாணிக்கத்தைப் பிடித்து நிறுத்தி விசாரித்தாள். அவன் சொன்ன செய்தியைக் கேட்டதும் அவளுக்கு பகீர் என்றது. "முத்துக்குளத் தெருவிலே இந்து-முஸ்லீம்களுக்கிடையே பெரிய கலவரமாகி, போலீஸ் வேன் வந்து எல்லாரையும் அள்ளிப் போட்டுகிட்டுப் போயிருச்சாம். ஊரே ரெண்டு பட்டுக் கெடக்கு ஆத்தா."

"அட கடவுளே."

அஞ்சா நெஞ்சம் படைத்த அஞ்சலை ஆத்தா சேதியைக் கேட்டு அப்படியே ஆடிப் போய் உட்கார்ந்து விட்டாள்.

"ஜாதி, மத, இன பேதமில்லாமல் ஒரு தாய் மக்களா இத்தனை காலமும் வாழ்ந்த இந்த மயிலாடுபெட்டியில இப்படி ஒரு நிகழ்ச்சி?"

அஞ்சலை ஆத்தாவால் ஜீரணிக்க முடியவில்லை; தவித்துப் போனாள். இப்படி ஒரு நாளும் அவள் கலங்கியதில்லை.

"மயிலாடுபட்டியிலா இப்படி ஒரு அசம்பாவிதம்..? நானும் இந்த கிராமத்துக்கு வந்து பத்து வருஷமாகப் போவுது. இந்த கிராமத்து மக்களுக்குள்ளேதான் என்னா ஒரு ஒற்றுமை, பாசம், நேசம்! ஒவ்வொரு வீட்டு கஷ்ட நஷ்டங்களையும் தன்னோடதா நெனைச்சு செயல்படுற இந்த மக்கள் மத்தியிலா மத்தவங்க பேராலே கலவரம்?...."

அஞ்சலை ஆத்தாவால் நம்பவே முடியவில்லை.

எங்கேயோ ஏற்பட்ட மதக்கலவரம், பாசத்தால் கொண்டிருந்த இந்த மக்களிடையேகூடப் பிளவை ஏற்படுத்தி விட்டதேயென்று நினைக்கும்போது அஞ்சலை ஆத்தாவுக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

நாட்கள் நகர்ந்தன...

ஊருக்குள் முன்பிருந்த கலகலப்பு இல்லை. இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் என்று அந்தந்த மக்கள் தங்களுக்குள் ஒரு வட்டம் போட்டுக் கொண்டு அடங்கிப் போனார்கள்.

அஞ்சலை ஆத்தாவுக்குத்தான் பொறுக்க முடியவில்லை. சங்கரையும் ரவியையும் அழைத்து வைத்துக் கொண்டு அடிக்கடி சொல்லுவாள்;

“ஏலே சங்கரு! ரவி! ஜாதி, மதம்னு யாரையும் பிரிக்கக் கூடாதுலே. எல்லாருமே நம்மள மாதிரி ரத்தமும் சதையும் இருக்கிற மனுஷங்க தான். நம்மள மாதிரி அவுங்களுக்கும் உணர்ச்சி உண்டு. அவனும் நம்ம மாதிரிதான், எப்பவும் நெனச்சு பழகணும். கண்ணுக்குத் தெரியாத ஜாதி, மதங்ற பேரைச்சொல்லி... கண்ணுக்குத் தெரியிற மனுஷன மதிக்காம அடிச்சுகிறான் மனுஷங்களுக்கு இப்போ எல்லாம் வக்கர புத்தி ரொம்ப சாஸ்தியாப் போச்சு. ஏலே பசங்களா.. இந்த பெரிய ஆளுக செய்றதயெல்லாம் நீங்க பின்பத்தாதீங்கடா. அன்புங்கற ஒரு மதத்தை மட்டுமே நீங்க பின்பத்துனா போதும்! ஏலே... அன்புதான்டா கடவுள்!”

அஞ்சலை ஆத்தா அடிக்கடி சொல்லும் இந்த வார்த்தைகள் அந்த இளம் நெஞ்சங்களில் கொஞ்சம் ஆழமாகவேப் பதிந்தன.

இரண்டு மாதங்கள் ஓடி விட்டன! ரம்ஜான் பண்டிகைக்கு ஒரு வாரமே இருந்தது.

சிலர் பெரியவர்களோடு கூடிப்பேசி, ரம்ஜான் பண்டிகையின் போது தர்காவாசலில் நின்று வழக்கம் போல் ஏழை எளியவர்களுக்காகக் கஞ்சி காய்ச்சி ஊற்றுவதை நிறுத்தி விடுவதென்று முடிவு செய்தார்கள்.

அன்று ரம்ஜான் பண்டிகை!

வழக்கம் போலவே தர்க்கா வாசல் எதிரில் ஏழை, எளிய மக்கள் பாத்திரங்களில் கஞ்சி வாங்கிச் சென்றுகொண்டிருந்தனர். சிறிதுசிறிதாக இந்தச் செய்தி கேள்விப்பட்டுக் கூட்டம் கூடி விட்டது அங்கே! அங்கே... கம்பீரமாக நின்று கொண்டு பெரிய அண்டாக்களிலிருந்து கஞ்சியை ஆப்பையில் மொண்டு மொண்டு வரிசையாக வந்து கொண்டிருந்த மக்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தாள் அஞ்சலை ஆத்தா!

அறுபது ஐம்பது வயதில் பழுத்தப் பழமாக – வாட்ட சாட்டமாக நின்று கொண்டிருந்த அஞ்சலை ஆத்தாவைக் கேட்கவே வந்தவர்கள் தயங்கினர்.

சுதாரித்துக் கொண்டு முன்னே வந்தார் வெங்கடேசன். அவர் அந்த மக்களை மந்தைகளாக்கியவர்களில் ஒருவர்!

“அஞ்சலை ஆத்தா! என்ன காரியம் பண்றீங்க?.. இந்த எடத்துலேந்து இனிமே இந்தப் பண்டிகைக்கு கஞ்சி ஊத்துறதில்லேன்னு முடிவு பண்ணியிருக்கோமில்லே...?” வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு மரியாதையோடு பேசினார் அவர்.

“நீங்கதான் பண்ணியிருக்கீங்க! நான் பண்ணலே!” கைகள் பாட்டுக்குப் பரிமாறிக் கொண்டிருக்கப் பதில் பளிச்சென்று வந்தது.

“ஆத்தா! நீங்களும் எங்களை சேர்ந்தவங்க” – யாரோ கூட்டத்தில் சத்தமிட்டார்கள்.

“நான் உங்களை மட்டுமில்ல, இவுங்களையும் சேர்ந்தவலே! ஒரு மனுஷி!”

கூட்டம் வாயடைத்து நின்றது ; பிறகு யாரோ சொன்னார்கள்.

“என்ன இருந்தாலும் இது தப்பு!”

“எது தப்பு?.... உங்களுக்கும் எனக்கும் அவுங்களுக்கும் பொதுவா இருக்கிற பசிக்குக் கொஞ்சம் சாப்பாடு போடுறதாலே?”

சுளீர் என்று சவுக்கால் அடிப்பது போலிருந்தது.

"ஆத்தா! நம்ப மதக் கட்டுப்பாடுகளுக்கு எதிரா இருக்குது நீங்க செய்ற இந்தக் காரியம். அதோட விளைவை நீங்க அனுபவிக்க வேண்டியிருக்கும்.... " ஊர்த் தலைவர் விசுவம் அஞ்சலை ஆத்தா அருகில் வந்து நின்று கொண்டு கொஞ்சம் அதட்டலாகவே சொன்னார்.

அஞ்சலை ஆத்தா அங்கு நின்ற அனைவருக்கும் மௌனமாகக் கஞ்சியை ஊற்றி முடித்த பின், வியர்வையை வழித்தெறிந்து விட்டு, புடவை முந்தானையை இழுத்துச் செருகிக் கொண்டு நிமிர்ந்தாள். எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தாள்.

"இந்த ஊர்மேல மட்டுமல்ல. உங்க ஒவ்வொருத்தர் மேலயும் நான் அன்பும் அபிமானமும் வச்சிருக்கேன்லே... தாயி.. பிள்ளையா இத்தனை வருஷமா இருந்த நீங்க, எங்கேயோ நடந்த சம்பவத்தக் காரணம் காட்டி இன்னைக்கி விரோதிகளா மாறிட்டு வர்றீங்க. பத்து வருசமா ஒங்கள்ளே ஒருத்தியா பழகிட்ட என்னாலே இதைத் தாங்கவே முடியலேப்பா. ஆண்டாண்டா நீங்க செஞ்சிட்டு வர்ற இந்த நல்ல காரியம் நின்னு போறத நான் விரும்பல. இது அன்புக்கும் ஒத்துமைக்கும் அடையாளமா இருக்குலே! அதனாலேதான் எனக்கிருந்த ஒரே சொத்த வித்து அந்த காரியத்த செஞ்சேன்! மதத்துப் பேராலே என்னை



வெலக்கிவப்பீங்க பரவாயில்லேப்பா! அந்த ஆண்டவன் என் நெஞ்சுலே நெறஞ்சிருக்கான்; அத என்வாழ்க்கையுலே காட்டுனா போதும்லே!" அழுத்தம் திருத்தமாகப் பேசிவிட்டு அந்த இடத்தைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்ட ஆத்தாவை அப்போதுதான் பார்த்தார்கள். அவள் காதுகள் காலியாக இருந்தன ; அவளுடைய ஒரே சொத்தான அந்த மூன்று பவுன் தங்க நகையை - காதணியான பாம்படத்தைக் காணவில்லை.

"எங்கேயிருந்தோ இங்கு வந்த எளிய படிக்காத, வயதான, இந்த அஞ்சலை ஆத்தா ஏன் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்?..." 'இந்தக் கேள்வி அங்கிருந்தவர்களின் மனதில் மெல்ல எழ ஆரம்பித்தது!.

**- வி. பூரணி**

- அஞ்சலை ஆத்தா எனும் கதாபாத்திரத்தைத் (கதைக்கரு, கதாபாத்திரம், மொழிநடை எனும் அடிப்படையில்) திறனாய்வு செய்க.
- "இந்த ஊர் மேல மட்டுமில்ல உங்க ஒவ்வொருத்தர் மேலயும் நான் அன்பும் அபிமானமும் வச்சிருக்கேன்ல, தாயி பிள்ளையா இத்தனை வருஷமா இருந்த நீங்கள் எங்கயோ நடந்த சம்பவத்தக் காரணம் காட்டி இன்னைக்கி விரோதிகளா மாறிட்டு வர்றீங்க. பத்து வருசமா ஒங்கள்ளே ஒருத்தியா பழகிட்ட என்னாலே இதைத் தாங்கவே முடியலேப்பா...."

  வட்டார வழக்கில் அமைந்த இப்பகுதியைத் தூய தமிழ் நடையில் மாற்றுக.

# உலகம் போற்றும் உத்தமர்

அக்டோபர் 2-ஆம் நாள் மனித குலத்தின் மாணிக்கம் மகாத்மா காந்தி பிறந்த நாளாகும். அந்தப் புனிதர் பிறந்த புண்ணிய நாள் பாரதம் முழுதும் பக்தியோடு கொண்டாடப்படுகிறது. தமிழகமும் இதற்கு விதிவிலக்கல்ல. அவர் பிறந்த வினாடியில் உலகில் எத்துணையோ பேர்கள் பிறந்திருக்கக் கூடும். ஆனால், அவரெல்லாம் மகாத்மா ஆகிவிடவில்லை. ஆகிவிடவும் முடியாது.

வேங்கடத்துக்கு வடக்கே உள்ளவர்கள் அப்பெருமானை வெறும் மானிடராக-காபா காந்தி பெற்றெடுத்த கரம் சந்திர மோகனதாஸ் காந்தியாக... மதித்தபோது அவரை மகாத்மாவாக எண்ணி வழிபட்ட பெருமை தமிழகத்துக்கே உரிமை.

ஆம் ; "பாழ்பட்டு நின்றதாம் ஓர் பாரத தேசந்தன்னை, வாழ்விக்க வந்த காந்தி" என்று கூறி, அடிகளாரின் ஆற்றலை அளந்து காட்டியதோடு மகாத்மா நீ வாழ்க, வாழ்க என்றும் பாடினார் பாரதியார்.

காந்தியடிகள் தாம் பிறந்த நேரத்தின்-லக்கினத்தின் சிறப்பால் மகாத்மா ஆனவரல்லர். அப்படி ஒரு நம்பிக்கை மனித சமுதாயத்திடையே நிலவி வருவதை நாம் மறுத்துக் கூறவில்லை. ஆயினும், மனிதன் முயன்றால், மகாத்மா ஆக முடியும் என்ற நம்பிக்கை நிலை பெற வேண்டும். லக்கின நம்பிக்கை சுய முயற்சிக்குத் துணைபுரியாது.

காந்தியடிகள் அடிமை நாட்டில் பிறந்தார். அது காரணமாக, ஒரு மாபெரும் சமுதாயத்திற்கு விடுதலை தேடும் பொறுப்பை மேற்கொண்டார். கதிரவன் மறையாத ஒரு மாபெரும் வல்லரசைப் பாரதத்திலிருந்து வெளியேற்றி வெற்றி கண்டார்.

காந்தியடிகள் வைதிகத் தாய்க்கு மகனாகப் பிறந்தார். அந்தத் தாயின் சொற்படி நடப்பதையே புனிதக் கடமை எனக் கொண்டார்.

தெய்வ நம்பிக்கையுடைய குடியில் தோன்றினார். குடிப்பெருமைக்கேற்பத் தம் வாழ்நாள் முழுவதும் தெய்வத்திடம் சரணடைந்து கிடந்தார்.

காந்தியடிகள் பிறரை அடக்கி அவர்மீது ஆதிக்கம் செலுத்த ஆசைப்படவில்லை. அப்படியும் ஒரு நிலை இருப்பதை மகாத்மா அறிவார். அந்த நிலையை எய்தவும் அவருக்கு வாய்ப்பு நேர்ந்தது. ஆம் ; அவர் நினைத்திருந்தால், 1947 ஆகஸ்டு 15-இல் பாரதக் குடியரசின் தலைவராக வந்திருக்க முடியும். அதனை மனத்தாலும் நினையாமல் தம் ஐம்புலன்களையும் அடக்கி, அவற்றின்மீது ஆதிக்கம் செலுத்தி, தன்னைத்தான் ஆள விரும்பினார். அதிலே அவர் மகத்தான வெற்றி கண்டார்.

இத்துணைச் சூழ்நிலைகளும் சேர்ந்தே மோகனதாஸ் காந்தியை மனித குலத்தின் மகாத்மா ஆக்கின. இந்தச் சூழ்நிலை, காந்தி பிறந்த வினாடியில் உலகில் தோன்றிய வேறெவருக்கும் இருக்கவில்லை.

காந்தியடிகள் அடிமை நாட்டில் பிறந்து, சுதந்திர நாட்டில் மறைந்தார். ஆம் ; அடிமை இருளில் பிறந்து, சுதந்திர ஒளியில் மறைந்தார்.

பலாத்காரத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட சமுதாயத்தில் தோன்றி, அகிம்சையிலே பற்றுக்கொண்ட சமுதாயத்தை உருவாக்கி மறைந்தார்.

பல நூற்றாண்டுகளாக மதவெறி நர்த்தனமாடிய நாட்டில் தோன்றி, தம் உயிரைத் தியாகம்

செய்ததன் மூலம் மதவெறியின் கொடுமையை மக்கள் உணரும்படி செய்துவிட்டு மறைந்தார்.

இப்படி, அண்ணல் காந்தி நிகழ்த்திய அற்புதங்கள் அளவில. காந்தியடிகளின் சாதனைகளைக் கவிபாட, அவற்றைத் தொகுத்துக் காப்பியமாக உருவாக்க மற்றொரு கம்பன்தான் பிறக்க வேண்டும்.

காந்தியடிகளின் சாதனைகளிலெல்லாம் சிறந்தது, அவர் காந்தியம் என்ற சமுதாயச் சித்தாந்தமொன்றைத் தந்ததாகும். காந்தியடிகளைக் கொன்ற கோட்சேயால் கூடக் காந்தியத்தைக் கொல்ல முடியவில்லை.

காந்தி அடிகள், தெய்வம் நமக்குத் தந்த பரிசு. காந்தி என்ற மருத்துவர் மறைந்துவிட்டார். ஆனால், அவர் தந்த காந்தியம் என்ற மருந்து இருக்கிறது. சமுதாயத்தைப் பிடித்துள்ள அத்துணைப் பிணிகளையும் அகற்றத் தக்க அருமருந்தாகும் காந்தியம்.

காந்தியடிகள் பிறந்த விழா வாரத்தைத் தேசிய ஒருமைப்பாடு வாரமாகக் கொண்டாடுகின்றனர் மக்கள்.

காந்தியப் பார்வையில் ஒருமைப்பாடு என்பது பாரத தேசத்தைப் பற்றிய தனிச் சித்தாந்தமன்று. காந்தியம் உயிர்க்குலமனைத்துக்கும் பொதுவான சித்தாந்தம். அதன் அம்சமான ஒருமைப்பாட்டுணர்வும், உயிர்க்குலமனைத்திற்கும் பொதுவானதாகவே கருதப்பட வேண்டும். ஆகவே, 'காந்தி வாரம்' உலக ஒருமைப்பாடு தோன்றும் வகையில் கொண்டாடப்பட வேண்டும்.

அதற்கு உதவி புரியும் வகையில்தான் இந்தியத் தேசிய ஒருமைப்பாடு வாரமாகக் காந்தி விழாவைக் கொண்டாடுகிறோம்.

சாதி வேற்றுமையும் வெறியும் அழிந்தால்,

மத வேற்றுமைகளும் வெறிகளும் தொலைந்தால்,

மொழிவழிப்பட்ட ஆதிக்கம் மறைந்தால்,

மாநிலத்திற்கு மாநிலம் நிலவிவரும் ஏற்றத் தாழ்வு அகன்றால்,

மனிதனை மனிதன் ஏய்த்துப் பிழைக்கும் இடர்ப்பாடு ஒழிந்தால்,

ஆங்கில மொழியின் ஆதிக்கம் அடியோடு விலகினால்,

சுரண்டுவோர்-சுரண்டப்படுவோர் என்ற அடிப்படையில் வளர்ந்துவிட்ட வர்க்க வேறுபாடு மாய்ந்தால்

அந்தக் கணமே பாரதத்தில் தேசிய ஒருமைப்பாடு தோன்றி, பாரத மக்கள் எல்லாரும் ஓரினமாக, ஒற்றைக் குலமாக ஒன்றுபட்டு வாழும் நிலை பிறக்கும். ஒருமைப்பாடு என்பது தனிச் சரக்கன்று. பல சரக்குகளின் கூட்டுப் பண்டமே.

காந்தியின் பெயரால், காந்தியத் தத்துவத்தின் பெயரால், தேசிய ஒருமைப்பாட்டிற்குப் பணிபுரிய முன்வரும் ஒருவர், முதலில் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். தன்னை சாதி, சமய, கட்சி, தன்னல வெறிகளிலிருந்து விடுவித்துக்கொள்ள வேண்டும். அடுத்து, தான் சார்ந்துள்ள கட்சியையும் தூய்மைப்படுத்த முயல வேண்டும். அதன் பிறகே மக்களை அணுகி, அவர்களிடையே ஒருமைப்பாட்டுணர்ச்சியை வளர்க்க முயலவேண்டும். இதெல்லாம் சாத்தியமா என்று கேட்கலாம். ஏன் சாத்தியமாகாது? சாத்தியம் ஆகாதென்றால், பிரிவினைச் சக்திகளைப் புறங்கண்டு, தேசிய ஒருமைப்பாட்டினைக் காண்பதும் சாத்தியமில்லைதான்.

சோர்வை நீக்கி, சுயநலத்தை விடுத்து, கட்சி வளர்க்கும் உள்நோக்கை ஒழித்து நாட்டின் நலத்திற்காகவே கட்சி எனக் கருதி, காந்தியடிகள் பிறந்தவிழா வாரத்தில் தேசிய ஒருமைப்பாட்டுப் பணியில் ஈடுபடுவோமாக!

என்ன விலை கொடுத்தேனும் இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றியாக வேண்டும். ஒன்றுபட்ட இந்தியாவை அழிக்கும் சக்தி இந்த உலகத்தில் இல்லை. அதுபோல, பல நாடுகளாக இந்தியா பிளவுபடுமானால், அவற்றைக் காக்கும் சக்தியும் உலகத்தில் இல்லை. இந்த உண்மையை வீடுதோறும் சென்று கதவிலடித்துச் சொல்ல வேண்டும். தமிழர் ஒவ்வொருவருடைய மனக்கதவையும் திறந்து அதற்குள்ளே இந்தச் செய்தியைச் சேர்க்க வேண்டும்.

**– ம.பொ.சிவஞானம்**
**(சிந்தனை அலைகள்)**

- காந்தி பிறந்தநாள் விழாவில் 'காந்தியும் அஹிம்சையும்' எனும் தலைப்பில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு உரை ஒன்று தயார் செய்க.
- பத்திரிகைகளிலும் இதழ்களிலும் வெளியாகும் சமூகச் சீர்திருத்தவாதிகள் பற்றிய குறிப்புகள், கவிதைகள், படங்கள் முதலியவற்றைச் சேகரித்து 'மண்ணுலகம் போற்றும் மாணிக்கங்கள்' எனும் தலைப்பில் இதழ் ஒன்று வெளியிடுக.
- 'மதம் ஏதாகிலும் ஆகுக! மனிதன் நல்லவனாக இருந்தால் போதும்' எனும் ஸ்ரீநாராயண குருவின் வாக்கிற்கேற்ப, மனிதன் வேற்றுமையை மறந்து ஒற்றுமையை வளர்க்கும் வகையில் பத்திரிகைக்கான தலையங்கக் கட்டுரை தயார் செய்க.

**எதுகை, மோனை**

ஒரு பாடலின் அடிப்படையான சிறப்பு அதன் ஓசைநயம்தான். பாடலுக்கு ஓசைநயத்தைத் தருவதுதான் எதுகையும் மோனையும்.

**எதுகை**

ஒரு பாடலின் ஒவ்வொரு அடியிலும் இரண்டாவது எழுத்து ஒரே எழுத்தாக அமைந்து வருமானால் அது எதுகை எனப்படும். எடுத்துக்காட்டு:

**"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை**
**நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்துஎன்**
**ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"**

இப்பாடலின் ஒவ்வொரு அடியிலும் இரண்டாவது எழுத்தாக 'ன்' என்னும் எழுத்து ஒரேபோல் வந்துள்ளது.

**மோனை**

ஒரு பாடலின் ஒவ்வொரு அடியிலும் முதல் எழுத்து ஒரேபோல் அமையுமானால் அது மோனை எனப்படும். எடுத்துக்காட்டு:

**"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி**
**வாழிய வாழிய வே**
**வான மளந்த தனைத்தும் அளந்திடும்**
**வண்மொழி வாழிய வே!"**

இங்குப் பாடலின் ஒவ்வொரு அடியிலும் 'வ' என்னும் எழுத்து ஒரேபோல் வருவதைக் கவனியுங்கள்.

- உனக்குத் தெரிந்த எதுகையும் மோனையும் நயம்பட அமைந்த பாடல் ஒன்றைத் தருக.
- எதுகை, மோனை நயம் அமையுமாறு குறுங்கவிதையொன்று படைக்கவும்.